## சுருக்கம்

சிறப்புப் பொது விநியோகத் திட்டம் – துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில், ரவை மற்றும் மைதா ஆகிய அத்தியாவசியப் பொருட்கள் நியாய விலைக் கடைகள் மூலம் விநியோகம் – ஜுலை, 2008 வரை தொடர்ந்து செயல்படுத்துதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (டி1) துறை

அரசாணை (நிலை) எண். 15 நாள் 30–01–2008

படிக்க

1) அரசாணை (நிலை) எண்.106, கூ,உ(ம) நு.பா துறை, நாள் 04–04–2007
2) அரசாணை (நிலை) எண்.266, கூ,உ(ம) நு.பா துறை, நாள் 30–08–2007
3) அரசாணை (நிலை) எண்.4, கூ,உ(ம) நு.பா துறை, நாள் 11–01–2008
4) உணவுப்பொருள் வழங்கல் (ம) நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையரின் கடித எண் 13051/07, நாள் 08–01–08 மற்றும் 21–01–08.

------

ஆணை

பொது மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் அத்தியாவசியப் பொருட்களான உளுத்தம் பருப்பு, துவரம் பருப்பு, பாமாயில், ரவை மற்றும் மைதா ஆகியவைகளின் விலைகளை கட்டுப்படுத்த அரசு மேற்படி பொருட்களை கொள்முதல் செய்து நியாயவிலைக் கடைகளின் மூலம் விற்பனை செய்து வருகிறது. இத்திட்டம் 14–04–2007 முதல் சென்னையிலும், பிற மாவட்டங்களில் மே 20007 முதல் வாரத்திலிருந்தும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2. இத்திட்டத்திற்கு பொதுமக்களிடம் உள்ள ஆதரவினையும் பண்டிகைகால தேவைகளையும் கருத்தில்கொண்டு பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் இத்திட்டத்தினை ஜனவரி 2008 வரை தொடர்ந்து செயல்படுத்தலாமென ஆணை வெளியிடப்பட்டது.

3. பார்வை மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கோதுமையில் மாதந்தோறும் 2500 மெ.டன். கோதுமையை போலிக் அமிலம், இரும்புச் சத்து, வைட்டமின்–ஏ ஆகியவற்றை சேர்த்து செறிவூட்டப்பட்ட கோதுமை மாவாக மாற்றி குடும்ப அட்டைதாரர்களுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.11.00 என்ற விலையில் ஒரு கிலோ வீதம் வழங்க ஆணையிடப்பட்டது.

4. வெளிச்சந்தையில் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில், ரவை மற்றும் மைதா அதிகவிலையில் விற்பதால், பொதுமக்களிடையே நியாயவிலைக்கடைகளில் இப்பொருட்களின் விநியோகம் மிகுந்த வரவேற்பினைப் பெற்றுள்ளது. தமிழகத்தில் மக்கள் தற்போது படிப்படியாக அரிசிக்குப் பதிலாக கோதுமையை அதிகம் உபயோகித்து வருகின்றனர். எனவே மாதாந்திர தேவையினைக் கருத்தில்கொண்டு துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில், ரவை மற்றும் மைதா ஆகிய பொருட்களை வெளிச்சந்தையில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் கொள்முதல் செய்து குடும்ப அட்டைதாரர்களுக்கு தொடர்ந்து விநியோகம் செய்யலாம் என

உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையர் கருத்து தெரிவித்துள்ளார்.

5. உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. இத்திட்டத்திற்கு பொதுமக்களிடம் உள்ள ஆதரவினையும், பண்டிகை காலங்களில் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில், ரவை மற்றும் மைதா ஆகிய பொருட்களின் தேவைகளையும், வெளிச்சந்தை நிலவரத்தினையும் கருத்தில்கொண்டு, சிறப்பு பொதுவிநியோகத் திட்டத்தின்கீழ் தற்போது வழங்கிவரும் அனைத்து பொருட்களையும் ஜுலை 2008 வரை தொடர்ந்து வழங்கலாம் என அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5–ல் கண்ட ஆணைகளை செயல்படுத்த இதுவரை சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் விற்பனை செய்யப்பட்ட துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில் ஆகிய பொருட்களின் சராசரி அளவினைக் கருத்தில்கொண்டு, மாதாந்திர தேவைக்கேற்ப திறந்த ஒப்பந்தபுள்ளி மூலம் கொள்முதல் செய்து ஏற்கனவே நிர்ணயித்த விலையிலேயே விற்பனை செய்யவும், மாதந்தோறும் தேவைப்படும் ரவை, மைதாவை கோதுமை ஒதுக்கீடு இல்லாத காரணத்தால் ரவை மற்றும் மைதாவாகவே திறந்த ஒப்பந்தப்புள்ளி மூலம் கொள்முதல் செய்து அவற்றின் அடக்க விலையில் விநியோகம் செய்யவும், மாதந்தோறும் பொது விநியோக. திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கோதுமையில் மாதம் 2500 டன்னுக்கு மிகாமல் செறிவூட்டப்பட்ட கோதுமை மாவாக அடக்கவிலையில் விற்பனை செய்யவும் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையர் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக நிர்வாக இயக்குநர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. சண்முகம்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
ஆணையர்,
உணவுப்பொருள் வழங்கல் (ம) நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை–5.
நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சென்னை–10.
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை–10.
மாநிலக் கணக்காயர், சென்னை–18 / சென்னை–18 (பெயரில்)
மாநிலக் கணக்காயர் (தணிக்கை), சென்னை–18 / சென்னை–18 (பெயரில்)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
நகல்
நிதித்துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்